ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2249/2 - 2021 ඔක්තෝබර් මස 11 වැනි සඳුදා - 2021.10.11

*2249/2 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: KDS/PDB/4/3/02/12.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/9/2015/WS/122.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்** :

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், பாத்ததும்பர பிரதேச செயலாளர் பிரிவில், உடத்தலவின்ன கிராமத்தில் நில அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட இலக்கம் Maha/7084, 16.07.2021 ஆந் திகதியிடப்பட்ட சுவட்டு வரைபடத்தில் விரிவாக குறிப்பிடப்பட்ட 0.0506 ஹெக்டயார் அளவிலான கோன்கஹ கொடுவ, கமகெதர அரம்பயும் பொன்டாகொல்ல எனும் கீழ் குறிப்பிடப்படும் எல்லைக்குட்பட்ட காணித்துண்டு.

**காணியின் பெயர்**: **கோன்கஹகொடுவ, கமகெதர அரம்பயும் பொன்டாகொல்ல; உரிமை கோருபவர்**: **மல்லிகா குலதுங்க, இல. 11, உடத்தலவின்ன; விஸ்தீரணம்**: **0.0506 ஹெக்டயார்**.

வடக்கு: டபிள்யூ. சித்ராநந்த உரிமை கோரும் ஹீன்கென்த கெதர தோட்டம்; கிழக்கு: கே. எம். மல்லிகா குலதுங்க உரிமை கோரும் கோன்கஹகொடுவ, கமகெதர அரம்பயும் பொன்டாகொல்ல (இக்காணியின் மீதிப் பகுதி); தெற்கு: கே. எம். மல்லிகா குலதுங்க உரிமை கோரும் கோன்கஹகொடுவ, கமகெதர அரம்ப யும் பொன்டாகொல்ல (இக்காணியின் மீதிப் பகுதி); மேற்கு: பாதை (பிரதேச சபை).

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி பாத்ததும்பர பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும்,

1A - G 35085 - 25 (2021/10)
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

டபிள்யூ. எம். டீ. டீ. கே. வீரகோன்,
பிரதேச செயலாளர்,
பாத்ததும்பர.

பிரதேச செயலகம்,
பாத்ததும்பர.
2021, ஒற்றோபர் 05.

10 - 318

---

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

திருத்தம்

எனது குறிப்பு இல.: 2/2/1/சீஎச்/139.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2016/எச்டப்ளிவ்/224.

காணி எடுத்தல் (திருத்தச்) சட்ட திருத்தப்பட்டபடி காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் அறிவித்தலின் கீழ் இல. 2002/63 மற்றும் 2017.01.20 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரச வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் படி 9ஏ பக்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ள ஆ. வ. கம் 4012 இன் துண்டு இல. 155 இல் குறிப்பிடப் பட்டுள்ள காணிப் பகுதி மீள் அளவீட்டினால் திருத்தம் செய்யப்பட்டு துண்டு இல. 297 மற்றும் 298 ஆகவும், துண்டு இல. 156 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணிப் பகுதி மீள்அளவீட்டினால் திருத்தம் செய்யப்பட்டு துண்டு இல. 299 மற்றும் 300 ஆகவும், துண்டு இல. 166 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணிப் பகுதி மீள் அளவீட்டினால் திருத்தம் செய்யப்பட்டு துண்டு இல. 301 மற்றும் 302 ஆகவும் பிரிக்கப்பட்டுள்ளதோடு, இக்காணித் துண்டுகளுக்குரிய பந்தி கீழ்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கின்றேன்.

01. **துண்டு இல. 297**

காணியின் பெயர்: கண்டுபிடிக்க முடியாது; காணியின் விபரம்: வீட்டுத்தோட்டம், 20-25 வயதுடைய தென்னை மரம், 30 வயதுடைய வேப்பிலை மரம், 10 வயதுடைய கித்துல் மரம் மற்றும் 25 வயதுடைய மாமரம் உள்ளது; காணியின் உரிமை கோருவோர்: என். ஏ. பி. தினேஷா மற்றும் எஸ். ஆர். வெலகெதர, விலாசத்தைக் கண்டுபிடிக்க முடியாது, (எடுத்தலுக்கான இறுதிக்கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம்: 0.0142 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 298**

காணியின் பெயர்: கண்டுபிடிக்க முடியாது; காணியின் விபரம்: வீட்டுத்தோட்டம், கட்டப்பட்டு கொண்டிருக்கும் நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி, 20-25 வயதுடைய தென்னை மரங்கள் 3 மற்றும் 10-20 வயதுடைய மாமரம் உள்ளது; காணியின் உரிமை கோருவோர்: என். ஏ. பி. தினேஷா மற்றும் எஸ். ஆர். வெலகெதர, விலாசத்தைக் கண்டுபிடிக்க முடியாது, (எடுத்தலுக்கான இறுதிக் கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம்: 0.0292 ஹெக்டயார்.

03. **துண்டு இல. 299**

காணியின் பெயர்: ஓவிட்டவத்தை; காணியின் விபரம்: வீட்டுத் தோட்டம், தகரத்தினால் ஆக்கப்பட்ட தற்காலிகக் கட்டிடத்தின் பகுதி, 20 வயதுடைய தென்னை மரங்கள் 10 மற்றும் 15 வயதுடைய மஹோகனீ மரம் உள்ளது; காணியின் உரிமை கோருவோர்: என். ஏ. சீ. பி. நிஸ்ஸங்க, இல. 105/சீ, ஜாஎல வீதி, கம்பஹா, (எடுத்தலுக்கான இறுதிக்கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம்: 0.0556 ஹெக்டயார்.

04. **துண்டு இல. 300**

காணியின் பெயர்: ஓவிட்டவத்தை; காணியின் விபரம்: வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டிடம், 30 வயதுடைய தென்னை மரங்கள் 15, 4 வயதுடைய தென்னை மரங்கள் 7 மற்றும் தேக்கு மரம், 30 வயதுடைய பலா மரம், 20 வயதுடைய மாமரங்கள் 2 மற்றும் ரம்புட்டான் மரங்கள் 2 உள்ளது; காணியின் உரிமை கோருவோர்: என். ஏ. சீ. பி. நிஸ்ஸங்க, இல. 105/சீ, ஜாஎல வீதி, கம்பஹா, (எடுத்தலுக்கான இறுதிக்கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம்: 0.1354 ஹெக்டயார்.

05. **துண்டு இல. 301**

காணியின் பெயர்: ருக்அத்தனகஹகும்புர காணி; காணியின் விபரம்: வீட்டுத்தோட்டம், மலசலகூடத்தின் பகுதி உள்ளது; காணியின் உரிமை கோருவோர்: கே. டீ. சுமித் ஹேமந்த தர்மதாச, இல. 294/7, ஹங்சகிரிவத்தை, கம்பஹா, (எடுத்தலுக்கான இறுதிக்கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம்: 0.0005 ஹெக்டயார்.

06. **துண்டு இல. 302**

காணியின் பெயர்: ருக்அத்தனகஹகும்புர காணி; காணியின் விபரம்: வீட்டுத்தோட்டம், மலசலகூடத்தின் பகுதி மற்றும் 25 வயதுடைய தென்னை மரம் உள்ளது; காணியின் உரிமை கோருவோர்: கே. டீ. சுமித் ஹேமன்த்த தர்மதாச, இல. 294/7, ஹங்சகிரிவத்தை, கம்பஹா, (எடுத்தலுக்கான இறுதிக்கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம்: 0.0101 ஹெக்டயார்.

கே. ஏ. எஸ். எல். குணதிலக்க,
பிரதேச செயலாளர் மற்றும் எடுத்தல் அதிகாரி,
கம்பஹா.

பிரதேச செயலகம்,
கம்பஹா.
2021 ஒற்றோபர் 08

10-319/1

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

திருத்தம்

எனது குறிப்பு இல.: 2/2/1/சீஎச்/139.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2016/எச்டப்ளிவ்/224.

காணி எடுத்தல் (திருத்தச்) சட்ட திருத்தப்பட்டபடி காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் அறிவித்தலின் கீழ் இல. 2002/63 மற்றும் 2017.01.20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரச வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் படி 9ஏ பக்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ள ஆ. வ. கம் 4012 இன் துண்டு இல. 154 மற்றும் 165 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணிப் பகுதி மீள் அளவீடினால் திருத்தம் செய்யப்பட்டு, இக்காணித் துண்டுகளுக்குரிய பந்தி கீழ்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கின்றேன்.

01. **துண்டு இல. 154**

காணியின் பெயர்: கண்டுபிடிக்க முடியாது; காணியின் விபரம்: வீட்டுத்தோட்டம், மலசலகூடம், சீமெந்தினால் கட்டப்பட்ட நாய்க் கூடு மற்றும் 10-15 வயதுடைய தென்னை மரங்கள் 4 உள்ளது; காணியின் உரிமை கோருவோர்: கண்டுபிடிக்க முடியாது, (நீக்குவதற்காக); விஸ்தீரணம்: 0.0143 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 165**

காணியின் பெயர்: ருக்அத்தனகஹகும்புர காணி; காணியின் விபரம்: வீட்டுத்தோட்டம், அரை நிரந்தரக் கட்டிடம், சீமெந்தினால் கட்டப்பட்ட கிணறு, மலசலகூடம், 25 வயதுடைய தென்னை மரங்கள் 4, 20 வயதுடைய மாமரங்கள் 2 மற்றும் பாக்கு மரம் உள்ளது; காணியின் உரிமை கோருவோர்: ஜே. வீ. சரத் நந்தசிறி மற்றும் ஸ்வர்ணா பெரேரா, இல. 105, ஜாஎல வீதி, கம்பஹா, (நீக்குவதற்காக); விஸ்தீரணம்: 0.0289 ஹெக்டயார்.

கே. ஏ. எஸ். எல். குணதிலக்க,
பிரதேச செயலாளர் மற்றும் எடுத்தல் அதிகாரி,
கம்பஹா.

பிரதேச செயலகம்,
கம்பஹா.
2021 ஒற்றோபர் 08

10 - 319/2